## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – 2021-2022 - பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு தக்க செயலிகளுடன் கூடிய திறன்பேசிகள் வழங்கும் திட்டம் - 8000 எண்ணிக்கையிலான திறன்பேசிகள் ஒன்றின் விலை ரூ.12,500/- என்ற மதிப்பில் ஒப்பந்தப்புள்ளியில் தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு கொள்முதல் ஆணை வழங்கப்பட்ட நிகழ்விற்கு பின்னேற்பு ஆணையும் மற்றும் காத்திருப்பு பட்டியலில் மீதமிருக்கும் 704 பயனாளிகளுக்கு திறன்பேசிகள் வழங்கிட கூடுதல் நிதி ஒதுக்கீடும் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது

---

### மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை

அரசாணை (ப) எண்.07

நாள்: 16.03.2022
பிலவ, பங்குனி - 2,
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது :

1. அரசாணை (ப) எண்.34, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 06.12.2021.

1. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடித எண்.9681/உ.உ-பிரிவு/2021, நாள் 16.12.2021..

******

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சுமார் 5000 பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் மற்றும் 5,000 செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு தக்க செயலிகளுடன் கூடிய திறன் பேசி வழங்கும் திட்டத்தினை 2021–2022 ஆம் நிதியாண்டில் தொடர்ந்திட நிர்வாக அனுமதியும் மற்றும் இத்திட்டத்தினை கீழ்க்காணும் நிபந்தனையின் அடிப்படையில் செயல்படுத்திட ரூ.10.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடப்பட்டது:-

i) அரசாணை (ப) எண்.30, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 25.09.2020-இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்றி ஒரு திறன் பேசி ரூ.10,000/- என்ற விலைக்கு மிகாமல் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

ii) திறன்பேசிகளின் விலை மற்றும் எண்ணிக்கையில் மாறுபடும் நேர்வுகளில் அரசின் முன் அனுமதி கட்டாயம் பெறப்பட வேண்டும்.

iii) தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ஐ பின்பற்றி வெளிப்படை தன்மைக்கு ஏற்ப கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடிதத்தில் 2021-2022-ஆம் நிதியாண்டில் திறன்பேசிகள் கொள்முதல் செய்வதற்கு ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து மேற்படி திறன்பேசிகள் கொள்முதல் செய்வதற்கு திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது என்றும் பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட நபர்கள் அடங்கிய தொழில்நுட்பக் குழுவில் திறன்பேசிக்கு பல்வேறு வகையான கூடுதல் வசதிகள் வேண்டும் எனத் தெரிவித்ததன் அடிப்படையில் கூடுதல் வசதிகள் அடங்கிய திறன்பேசிக்கு ரூ.13,996/- என விலைப்புள்ளி நிர்ணயம் செய்யப்பட்டது என்றும் ஆனால் அரசு இந்நேர்வில் விலை குறைப்பு செய்திட பேச்சுவார்த்தை நடத்திட வேண்டும் என பணித்ததின் அடிப்படையில் விலைப்புள்ளி அளித்த L1 நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில் ஒரு திறன்பேசியின் விலை ரூ.12,500/- என்று இறுதி விலையாக நிர்ணயிக்கப்பட்டதாக மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. இந்நிலையில் தற்போது 8000 எண்ணிக்கையிலான திறன்பேசிகள் ஒன்றின் விலை ரூ.12,500/- என்ற மதிப்பில் ஒப்பந்தப்புள்ளியில் தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக நிறுவனத்திற்கு ஒப்பந்த வரைவு அனுப்பப்பட்டு கொள்முதல் ஆணை வழங்கப்பட்ட நிலுவையிலுள்ள நிலையில் காத்திருப்போர் பட்டியலில் மீதமிருக்கும் பயனாளிகளுக்கு 704 திறன்பேசிகளை திறன்பேசி ஒன்றின் விலை ரூ.12,500/- என்ற அடிப்படையில் கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக ரூ.88,00,000/- கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசினைக் கோரியுள்ளார்.

4. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கோருருவினை நன்கு பரிசீலித்த அரசு அதனை ஏற்று, சுமார் 8000 பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு நவீன செயலிகளுடன் கூடிய திறன்பேசிகளை 2021-2022-ஆம் நிதியாண்டில் வழங்கிட திறன்பேசிகள் ஒன்றின் விலை ரூ.12,500/- என்ற மதிப்பில் ஒப்பந்த புள்ளியில் தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்திடம் கொள்முதல் ஆணை வழங்கிய நிலுவையிலுள்ள நிலையில் மற்றும் இதனுடன் தொடர்பாக காத்திருப்போர் பட்டியலில் மீதமிருக்கும் 704 பயனாளிகளுக்கும் திறன்பேசி ஒன்றின் விலை ரூ.12,500/- என்ற அடிப்படையில் திறன்பேசிகள் வழங்கிட ஏதுவாக ரூ.88,00,000/-(ரூபாய்

எண்பத்து எட்டு இலட்சம் மட்டும்) ரூ.12,500 X 704) மட்டும் நிதி ஒப்பளிப்பும் செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :-

"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன்–101 மாற்றுத்திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – DM – கேட்கும் திறன் மற்றும் பார்வைத்திறன் குறைபாடுள்ளவர்களுக்கு திறன்பேசி வழங்குதல் – 309 உதவித்தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"

[IFHRMS த.தொ.கு. 2235 - 02-101 - DM - 30903]

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.88,00,000/- 2021-2022-ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். எனினும் 2021 - 2022-ம் ஆண்டிற்கான துணை மானிய கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்டப்பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்படும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் 2021-2022-ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவை தவறாது நிதி (வரவு செலவு) துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அ.சா. எண்.12400/ நிதி(சநு)/2022, நாள் 18.01.2022-இல் பெறப்பட்ட இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1832 (ஆயிரத்து எண்ணூற்று முப்பத்து இரண்டு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். லால்வேனா,
அரசு செயலாளர்.

பெறுநர்

மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.

அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள்

மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் வழியாக.

முதன்மை மாநில கணக்காயர், சென்னை—18
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை—35.

<u>நகல்:-</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை—9
நிதி (சந). )/வ.செ.பொ 1/2) த் துறை, சென்னை—9.
அரசு செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை—9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
16-3-22